Register as a News
paper Ceylon
P. M. G. NO. H. A
59/300 of 1939.

உ
சிவமயம்

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ம் தேதி ஆரம்பமா

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும் மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈசனெந்தை யிணையடி நீழலே

புத். ருரு | யாழ்ப்பாணம்:—சுபானு௵ ஐப்பசி௴ அ௳ (1943 அக்ரோபர்௴ 25 திங்கட்கிழமை) [இல. ருசு

## இன்னும் 5 வருடம் போருக்கு ஜப்பான் தயார்

### யுத்தக் கைதியின் தாவல்

பம்பாய், அக் 20

டி 'யாமரு' என்ற ஒரு ஜப்பானிய கப்பலில் அயல்நாட்டு யுத்தக் கைதிகள் பம்பாய்த்துறைமுகத்தில் வந்திறங்கியது ஞாபகமிருக்கலாம். ஜப்பானில் இரண்டு வருடங்களாக 'டைசல்' காட் பத்திரிகை நிருபர் ஒருவரும் இந்தக் கப்பலில் இங்குவந்து சேர்ந்தவர்களில் ஒருவர். இவர் கூறுவதாவது:-

"ஜப்பானியர்கள் ஜெர்மனியரை வெறுக்கிறார்கள். ஐரோப்பாவில் ஜெர்மானியருக்குக் கிடைத்துவரும் தோல்வியைப் பார்த்து இவர்கள் வருத்தப்படவுமில்லை. அவர்களை எதிர்பார்த்து இவர்கள் தங்களுடைய போர்த்திட்டத்தை அமைத்துக் கொள்வதும் கிடையாது. ஜப்பான் இன்னும் 5 வருடங்களுக்கு யுத்தம் செய்யத் தயாராக இருக்கிறது. இதற்கு அவர்கள் திட்டம் வகுத்துக்கொண்டும் வருகின்றனர்."

## கொழும்பு, காலி நகரசபைத் தேர்தல்கள்

### நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யும் தினங்கள்

கொழும்பு நகரசபையின் வரவிருக்கும் பொதுத் தேர்தலுக்கு அபேட்சகர்களாக நிற்க விரும்புவோர் அவர்களின் நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்யும் தினம் நவம்பர்மாதம் 11ம் திகதி யென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

[காலி நகரசபைத் தேர்தலுக்கு நியமனப் பத்திரங்கள் தாக்கல்செய்யும் தினம் நவம்பர்மாதம் 8ம் திகதியாகும்.

## அல்லாபக்ஷ் கொலை

சிந்துவின் பழைய பிரதம மந்திரி அல்லாபக்ஷ் கொலை செய்யப்பட்டாரல்லவா? அது சம்பந்தமாகப் பல மாதங்கள் புலன் விசாரித்து வந்த பொலிசார்கள் இன்று இரண்டு பேர்களைக் கைது செய்திருக்கின்றனர்.

## சர்வகலாசாலையின் முதற்பட்டமளிப்புவிழா

இலங்கைச் சர்வகலாசாலையின் முதலாவது பட்டப்பரீக்ஷையில் வெற்றிபெற்ற 82 ஆண்களுக்கும் பெண்களுக்கும் சென்ற புதன்கிழமை சர்வகலாசாலையின் ஜோர்ஜ்மன்னர் மண்டபத்தில் பட்டமளிப்பு விழா நடைபெற்றது.

உப அத்தியக்ஷகர் பெயர்களை வாசிக்க அத்தியக்ஷகர் தாரதரப் பத்திரங்களை வழங்கினர். விசேஷ அங்கி அணிந்த பட்டதாரிகள் மகிழ்ச்சியோடு தாரதரப் பத்திரங்களைப் பெற்றனர்.

சர்வகலாசாலை ஆசிரியர்கள், போதனாசிரியர்கள், பேராசிரியர்கள் உப அத்தியட்சகர்கள் முதலியோர் தங்கள் விசேஷ உடைகளுடன் முறைப்படி மண்டபத்திற் பிரவேசித்தனர்.

## நேசப்படை மற்றிரு நகரங்களைப்பிடித்தது

லண்டன் அக் 22—

அலிப், பீட்மெண்டீ அலிப் ஆகிய இரு நகரங்களையும் நேசதேசப் படைகள் கைப்பற்றிக்கொண்டனவென்று அல்ஜியேர்ஸ் ரேடியோ அறிவித்தது.

8-வது சேனை தனது தளங்களை நன்கு பலப்படுத்திக் கொண்டதாகவும், 5-வது சேனை வடக்கு நோக்கி முன்னேறுவதாகவும் இன்றைய நேசதேச அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாக அல்ஜியேர்ஸிலிருக்கும் பிரான்ஸிய ரேடியோ ஒலிபரப்பியது.

கிரிமியாக் கடற்கரையில் ருஷ்யர் இறங்க முயற்சித்ததாக ஜெர்மன் செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

### ஜெர்மானியர் பின்தள்ளப்பட்டனர்

வட ஆபிரிக்காவிலுள்ள நேசதேச இராணுவத் தலைமைக் காரியாலயத்திலிருந்து இன்று வெளியிடப்பட்ட நேசதேச அறிக்கை பின்வருமாறு கூறுகிறது:- "8-வது சேனை போராடும் அரங்கத்தில் கைப்பற்றப்பட்ட தளங்கள் பலப்படுத்தப்படுகின்றன. அடிக்கடி மாறுபட்டுக்கொண்டிருக்கும் சத்துருவின் எதிர்ப்புப்பற்றிய உண்மையை அறிவதற்காக ரோந்துப்படைகள் சுறுசுறுப்பாக நடவடிக்கை எடுத்து வருகின்றன. சத்துருவின் எதிர் - தாக்குதல்களை முறியடித்துக்கொண்டு 5-வது சேனை தொடர்ந்து முன்னேறுகிறது. சத்துருவின் பின்னணிப் படைகள் சுறுசுறுப்பாக இருக்கின்றன. தகர்க்கப்பட்டிருக்கும் பாதைகளும் பாலங்களும் செம்மையாக்கப்பட்டு வருகின்றன. அலிப், பீட்மெண்டீ அலிப் ஆகிய இரு நகரங்களும் கைப்பற்றப்பட்டன.

## கொம்மன்ஸ் சபை திரும்பக் கட்டப்படும்

### மிஸ்டர். சர்ச்சிலின் அறிக்கை

லண்டன் அக் 21

விமானத் தாக்குதலால் சேதமாக்கப்பட்டிருக்கும் கொம்மன்ஸ் சபைக் கட்டிடத்தைத் திரும்பக் கட்டுவதற்கான கட்டிட மாதிரிகளை ஆலோசிப்பதற்கு ஒரு விசேஷ நிர்வாகசபையொன்றை நியமிக்கத் தாம் உத்தேசித்திருப்பதாக மிஸ்டர் சர்ச்சில இன்று கொம்மன்ஸில் அறிவித்தார்.

## 5 ரூபாய்க்கு அரைப் போத்தல் சாராயம்

மலாயாவைச் சேர்ந்த எச். ஒதிரிஸ் பெரேரா, அதே ஊரைச் சேர்ந்த எச். டபிள்யூ. சிங்கோ என்பவருக்கு அக்டோபர்௴ 14ம் திகதி 5 ரூபாய்க்கு அரைப் போத்தல் சாராயம் விற்றார். கொழும்பு பொலிஸ்கோட்டில் இவர்மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் எதிரி தனது குற்றத்தை ஒப்புக்கொள்ளவே அவருக்கு நீதிபதி ரூ. 25 அபராதம் விதித்தார்.

## மெலிடாபோலின் மத்திய பாகத்தில் ருஷ்யர் பிரவேசித்தனர்

மொஸ்கோ அக் 21

ராய்ட்டர் காரியாலய நிருபர் பின்வருமாறு எழுதுகிறார்:—

'மெலிடாபோல் நகரத்தின் மத்திய பாகத்திலிருந்து ஜெர்மானியர் அடியோடு விரட்டப்பட்டுவிட்டனரென்று இன்றிரவு வெளியிடப்பட்ட சோவியத் அறிக்கை கூறுகிறது.

நீப்பர் நதியின் மேல்கரையில் கிரெமென்சக்கிற்குக் கீழே சோவியத் படைகள் ஏற்படுத்திக்கொண்டிருக்கும் பிரமாண்டமான பிளவுக்கூடாக அலைகள் கிரிவாய்ராக் நகரை நெருங்கிக்கொண்டிருக்கின்றன. இரும்புச் சுரங்கங்கள் மிகுந்திருக்கும் இந்த முக்கிய ரயில்வே ஜங்ஷன், நீப்ரோ பெட்ரோவ்ஸ்குக்குத் தென்மேற்கே 85 மைல் தூரத்தில் இருக்கிறது. நீப்பர்நதி வளைவில் இந்நகரம் ஒரு கேந்திர ஸ்தானமாக விளங்குகிறது. கிரிவாய்ராக் நகரத்திலிருந்து 30 மைல் தூரத்துக்குள் ருஷ்ய டாங்கிகள் வந்துவிட்டனவென்று யுத்த அரங்கத்திலிருந்து கடைசியாகக் கிடைத்த செய்திகள் கூறுகின்றன. கிரெமென்சக்குக்குத் தெற்கே ஏற்படுத்தப்பட்டிருக்கும் பிளவிலிருந்து இப்போது ருஷ்யர் 40 மைல் தூரம் முன்னேறியிருக்கின்றனர்.

நீப்ரோ பெட்ரோவ்ஸ்கிலிருந்து செல்லும் ரெயில்பாதைக்கும் கிரிவாய்ராக்கிலிருந்து செல்லும் ரயில் பாதைக்குமிடையே யிருக்கும் குறுகிய பிரதேசத்தில், மிக உக்கிரமான சண்டை இடைவிடாது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. ஜெர்மன் அரணில் ருஷ்யர் ஏற்படுத்தியிருக்கும் பிளவு இருபக்கத்திலும் விஸ்தரிக்கப்படுகிறது. இந்தப் பிளவின் ஒருபக்கத்தில் நீப்ரோ பெட்ரோவ்ஸ்கும் மறுபக்கத்தில் ஸபரோஸ்ஸெ நகரமும் இருக்கின்றன. நீப்ரோ பெட்ரோவ்ஸ்க் இருக்கும் பகுதியில் ருஷ்யர் நகரிலிருந்து 20 மைல் தூரத்திலிருக்கும் ஒரு நகரை அடைந்துவிட்டனர். கடந்த 24 மணி நேரத்தில இங்கு ஜெர்மானியரின் எதிர்ப்பு அதிகரித்திருக்கிறது.

## வங்கக் கவர்னர் ராஜினாமா

ரக்பி, ஆக், 21—

தேக அசௌக்கியம் காரணமாக வங்கக் கவர்னர் ஸேர். ஜோன். ஹேர்ப் அவருடைய பதவியை ராஜினாமாச் செய்துவிட்டார்.

ஆகஸ்ட்மாத இறுதியில், ஸேர். ஜோன் ஹேர்பர்ட் கடும் வியாதிக்குள்ளாகவே, அவருடைய ஸ்தானத்தைத் தற்காலிகமாக வகித்த பீஹார் கவர்னர் ஸேர். தொமஸ் ரூதர்போர்ட் செப்டம்பர்௴ 4ம் திகதி முதல் வங்கக் கவர்னராக நியமிக்கப்பட்டார்.

## ஹிட்லரை அகப்படுத்தச் செய்த சூழ்ச்சி பலிக்கவில்லையாம்

முஸோலினி தம்பதவியிலிருந்து விலக மார்ஷல் படக்லியோ தலைமை வகித்த சமயத்தில், படக்லியோவுடனும் இத்தலிய அரசரோடும் யுத்த விஷயமாகக் கலந்து யோசிப்பதற்காக படக்லியோ ஹிட்லரை ரோமாபுரிக்கு அவசியம் வரவேண்டுமென்று கேட்டாராம். படைவரிடத்தில் எந்த நேரமும் சந்தேகங் கொண்டுள்ள ஹிட்லர் அதற்கு மறுத்துவிட்டாராம். ரோமாபுரிக்கு ஹிட்லர் வந்தால், அவரை அகப்படுத்தி பிருத்தானிய அமெரிக்க ஐக்கிய ராச்சியத்தினர் வசம் கொடுப்பதற்குத் தானும், படக்லியோ இப்படிச் சூழ்ச்சி செய்ததென்றும், முஸோலினி பதவியை விட்டபின்னரும் தத்துவ ராச்சியத்தினர்க்குமாறாக இத்தலியர் யுத்தம் நடத்துவரென்று படக்லியோ அந்த நேரத்திற் சொன்னதும் ஹிட்லரை அனுப்புவதற்கேயென்றும், இந்தச் சூழ்ச்சிகளைக் கொண்ட ஒரு சாதனம் இப்பொழுது இத்தலியரிடத்திலிருந்து கொள்ளையிடப்பட்ட பொருள்களுடன் ஜர்மனியர் கையில் அகப்படலாயிற்றென்றும் ஜர்மனியர் தெரிவிக்கின்றனர்.

## அவதூறு வழக்கு

நல்லூரைச் சேர்ந்த திரு. K. சுவாமிநாதன்மீது அத்வக்காத் திரு. S இராசரத்தினம் தொடர்ந்த அவதூறு வழக்கு டிஸ்திரிக் நீதிபதி மிஸ்டர். ஜேம்ஸ் ஜோசேப்பால் சமாதானமாக்கப்பட்டது.

குறித்த அவதூறு 'இராமநாதன்' என்னும் பத்திரிகையிலும் 'டைம்ஸ் ஓவ் சிலோன்' என்னும் பத்திரிகையிலும் வெளியாயின.

திரு. M. பாலசுந்தரம், திரு. இராஜதுரை, திரு. சிற்றம்பலம் ஆகியோரும் திரு. C. சுப்பிரமணியமும் வாதியின் பக்கத்துக்கு ஏற்பட்டிருந்தனர்.

திரு. சூரசங்காரம், திரு. வன்னியசிங்கம், திரு. N. செல்வத்துரை ஆகியோர் பிரதிவாதியின் பக்கத்துக்கு ஏற்பட்டிருந்தனர்.

## தேவை

தமிழ் உபாத்தினைப் பத்திரம் (ஸேர்டிபிக்கற்) பெற்ற அல்லது எஸ். எஸ். ஸி. வகுப்பிற் சித்திபடைந்த ஒரு பெண் உபாத்திமாயர் தேவை. விரும்புவோர் நவம்பர் மாசம் 5-ந் தேதிக்குமுன் தங்கள் திறமையோடும் நற்சாட்சிப் பத்திரத்தோடும் எமக்குவிண்ணப்பஞ்செய்க.

தி. தம்பையா,
மனேஜர்,
கட்டுடைச் சைவ வித்தியாசாலை,
மானிப்பாய்,

M13, 14, 25-10 & 1.11.43.)

## விசேஷ விஞ்ஞாபனம்

வருகிற வியாழக்கிழமை (28-10-43) தீபாவலி காரணமாக, இந்துசாதனாலயம் சைவப்பிரகாச யந்திரசாலையென்னுமிவைகளிற் கருமம் பார்ப்போர்க்கு விடுதலையுதவப்படுதலால் அற்றைத்தினத்து இந்துசாதன ஆங்கில தமிழ்ப் பிரசுரங்கள் வெளிவரா.

மனேஜர்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் சுபானுஹூ
ஐப்பசிமீ அவ திங்கட்கிழமை

## இன்சொற் பஞ்சம்

"ஈகையரிதெனினும்
இன்சொலினும் நல்கூர்தல்,
ஓகோ கொடிது! கொடிது!"

என இன்சொற் பஞ்சத்தைக் கடிந்து கூறிப்போந்தனர் பெரியோர்; இன்சொல் எவர்க்கும் இன்றியமையாத நற்குணங்களுள் ஒன்றாகுமென்பதே பெரியோர் கொள்கை; அநுபவத்திற் கண்டதும் அதுவே; கற்றோர்க்குப் பெரியோர்க்கு அறிவுடையோர்க்குக் கருமம் பார்ப்போர்க்கு மகளிருக்கு சிறியார்க்கு எவர்க்கும் இன்சொற்பேசல் பிரதானமான இயல்பாகும்; ஏன்? இன்சொல் இடர்ப்படுப்பதில்லை. அவ்வளவோடு மாத்திரம் நின்றுவிடுமா? இல்லை, இல்லை. இன்சொல்லானது தன்னைப் பேசுவானிடத்து எவரையும் அவன் வசமாக்கும். அவன் சொல்லை எல்லோரும் அன்புடன் கேட்கச்செய்யும்; இன்சொல்லாற் காரிய சித்தியுண்டு, மதிப்புண்டு, இன்னும் பல நன்மையுண்டு; இன்சொல்லுடையானைத் தீயகுணங்களெவையும் அணுகா. இன்சொல் எவருள்ளத்தையும் உருகச் செய்யும்.

"வெட்டெனவை மெத்தெனவை
வெல்லாவாம் வேழத்திற்
பட்டுருவுங் கோல்பஞ்சிற் பாயாது—
நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாப் பாறை
பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும்"

எனப் பணித்தார் பெரியோர். இன்னும் "இனியவுளவாக இன்னாதகூறல் கனியிருப்பக் காய்கவர்ந்தற்று" எனவும், "இன்சொலாலன்றி இருநீர் வியனுலகம் வன்சொலால் என்றும் மகிழாதே" எனவும் இதன் மேன்மையைப் பெரியோர் பலவாறு பாராட்டியுள்ளனர்.

இப்படியெல்லாமிருப்ப, இக்காலத்திலே பொருட்பஞ்சம் நேர்ந்துளவாறு, இந்த இன்சொற் பஞ்சமும் நேர்ந்துவிட்டதேயென்பது பெரிதுங் கவலைப்படத் தக்கது. அரசாங்க உத்தியோகத் தானங்களிலாக, ஊரதிகாரிகளிடத்திலாக, நகரசங்கம பட்டின சங்கம் கிராமச்சங்கம் முதலிய சங்க வகைகளிற் கருமம் பார்ப்போரிடத்தாக, பொதுக் கருமங்கள் நடத்தப்படும் சங்கங்கள் சபைகளிலாகத் தருமதாபனங்கள் வாயிலாக வித்தியாதாபனங்களிலாக, எங்கே பார்த்தாலும் பெரும்பான்மையும் நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து விகிதம் வன்சொல்லும் ஐந்து விகிதம் இன்சொல்லும் பிரயோகிக்கப்படுகின்றனவெனலாம். இதற்குக் காரணம் என்னவென்பதை இலகுவில் அறிதல் முடியாதிருக்கிறது. உணவுப்பொருட் பஞ்சம், உடைப்பொருட் பஞ்சம், இன்னும் வாழ்க்கைக்குரிய இன்றியமையாத ஏனைய பொருள்களையிட்ட பஞ்சமாகிய இவைகட்குக் காரணங் காணுதல் முடியும். யுத்தங் காரணமாக பர்மா இந்தியாமேலைத்தேசம்முதலிய நாடுகளிலிருந்து அரிசி நெல் புடைவை ஏனைய பொருள்கள் வராமையினுல் மேலே சொல்லப்பட்ட பஞ்சம் நேரலாயினவெனலாம். ஆனல், இன்சொற் பஞ்சத்திற்கு இப்படியான காரணங் காட்டமுடியாதே. இன்சொல்லும் வன்சொல்லும் ஒவ்வொருவர் அகத்திற் பிறந்து வாக்கில் வழங்குவனவன்றோ; அப்படியாயின் அவ்விஷயத்திற் பஞ்சம் நேர்ந்ததற்கு ஏதுவில்லையே.

இந்தப் பஞ்சகாலத்தில் யாராயினும் ஏழைகள் அரசாங்க உதவியோக தானங்களிற் கடமை பார்க்கும் உத்தியோகத்தரென்றிருப்போரை வாய்புதைத்து உடைபொதுக்கிக் கைகட்டி எண்சாணுடம்பு ஒருசாணுகக் குறுகுமவரை பணிந்து நின்று 'ஐயா' என்று அழைத்துப் பரிவுடன் ஒரு கருமத்தை அஞ்சியஞ்சிக்கேட்டால், கேட்டவர்மீது சில உத்தியோகத்தர் சுணங்கன்போற் சீறி விழுகிறார்களாமே! இப்படித்தானு ஏழைகட்கிரங்குதல்? இங்குள்ள கடைகள் பலவற்றில யாராயினும் ஏழைகள் அவர்களுள்ளும் பெண்கள் பண்டம் வாங்கும்படி போய்ப் பசியின் கொடுமையினுல் "அண்ணே, நேரம் போகுது, தரவேண்டிய பண்டத்தைத் தந்துவிடு, பிள்ளைகளுக்குப் பசி" என்று இரந்து கேட்டால், அந்தக் கடையிலுள்ள கருமம் பார்ப்பவர் நாகம்போற் சீறியெழுந்து "தரமுடியாது போ, வேணுமானுற் பிறகு வா" என்று அதட்டி யுறுக்குகின்றாராமே! இதுதானு கடைக்காரர் தமயிடம பண்டங்கொள்வோரிடத்து ஊடாடும் முறை? இந்த வன்சொல்லைத் தனக்கடக்குவந்த அமோக திடகாத்திரமுள்ள ஒருவன்மீது பிரயோகித்தால் கடையில் நிற்போன் கதி என்னுகும்? வீண் சண்டையல்லவா மூளும்.

"வேசியுறவும் வியாபாரி தன்னுறவும்
காசு பொருளிலற்றிற் காணலாம்
காரிகையே"

எனப்பெரியோர் பொதுமக்களையும் வியாபாரிமாரையும் ஒரேநிலையிலே வைத்துப் பாடியிருக்கிறார்களே; எதற்கு? தம்மிடத்திற் கருமார்த்தமாக வருவோரை இதமாகவுபசரித்து இன்சொற்கூறித் தம்கருமம் பார்க்கவேண்டுமென்ற காரணம் பற்றியல்லவா? இதனை வியாபாரிமார் விசேஷமாக இந்தப் பசித்த காலத்திலே சிந்தித்து நடத்தல் வேண்டும். பொருள் பண்டங்கட்கு இக்காலத்திலே கட்டுப்பாடுண்டல்லாமல், இன்சொற் கட்டுப்பாடில்லையே. தரும சபைகளைக்கூட்டி நடத்துவோரும், "அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும் இழுக்கா வியன்ற தறம்" என்ற திருவாக்கைத் தத்தம் சிந்தையில் உறுத்தி மேலே சொல்லப்பட்ட நால்வகைக் குற்றங்களையும் அறவேயொழித்து ஒழுக முயலுதல் வேண்டும்; இல்லையேல் அவர்கள் செயல் குளிக்கப் போய்ச் சேற்றைப் பூசியவாறாகும்.

இனி, மேலே சொல்லப்பட்டோரிடத்து இன்சொல் இயல்பாகப் பிறத்தலில்லையோ, இவர்கள் ஒருகாலும் இன்சொல்வழங்குவதில்லையோவென வினவின், உண்டு; ஆனல் இவர்கள் தமக்கு வேண்டிய இடத்திலே மாத்திரம் பேசுவார்கள்; தம்கருமம் பார்த்தற்கு இன்சொல் இன்றியமையாததெனக் கண்டால் மாத்திரம் அதனை இயம்புவார்கள். இக்கீழதிகாரிகள் தத்தம் மேலதிகாரிகளுடன் பேசும்போது காட்டும் பணிவும் பேசும் இரப்புரைகளாகிய இன்சொல்லும் பக்கலிலே நின்று பார்ப்போர்க்குங் கேட்போர்க்குஞ் சாலவும் இனிமை பயப்பனவாகும்; அந்த மேலதிகாரிகள் அச்சமயத்திற் பேசும்வன்சொல்லையெல்லாம்இவர்கள்அப்படியேவாங்கிவைத்துக்கொள்வார்கள்ஏன்? தம்மிடத்திற் கருமம் பார்க்க வரும் ஏழை மக்களுக்கு வழங்கும்படிதான். இவர்கள் இந்தக் கொள்கையை விடுத்து, இன்சொல் வழங்க வழங்கக் குறைபுமிபல்புடைய தல்லவென்ற இரகசியத்தைபுணர்ந்து தம் மேலதிகாரிகளிடத்து வழங்குவதுபோலத் தம்மிடத்து வரும் ஏழைகளிடத்தும் வழங்கத் தொடங்குவரேல் இவர்களுக்கு அழியாப்புகழும் பெரும் புண்ணியமும் கிடைக்குமல்லவா?

வன்சொல் வழங்குவோரிற் பலர் இன்சொல்லை வழங்கும் இன்னுமொரு இடமும் உண்டு. "மாதர்க்கிதம்" என்ற பிரகாரம் தத்தம் மகளிரிடத்துப் பேசும்போது இன்சொல்லையன்றி வன்சொல் வழங்கார்கள்; இவர்கள் இன்சொல் வழங்க, அவர்கள் அதற்கு மாருக வன்சொல் வழங்கினும்,

"பேசவேண்டாம் என்னையவள்
ஏசினும் போதும்........"

என்று இரந்து நிற்பார்களாம. இப்படியான சஞ்சலபுத்தியை விடுத்து மக்களெவரும் இக்காலத்தில் மாத்திரமல்ல எக்காலத்திலும் இன்சொல்லையே வழங்கி வருவரேல் அதனுல் அடையக்கூடிய நன்மைகள் அளப்பிலவாகும். இதுபற்றியே ஆன்றோரும்:—

"இன்சொல் விளைநிலனுய் ஈதலே
வித்தாக
வன்சொற் களைகட்டி வாய்மையெரு
விட்டு
அன்புநீர் பாய்ச்சி அறக்கதிரீனவோர்
பைங்கூழ் சிறுகாலை செய்"

எனக் கூறிப்போந்தனர்.

## சமாதான நீதிவான்

திரு. வே. மாணிக்கவாசகர்

வழக்கறிஞரும், பிரசித்த நொத்தாரிஸ் ஆகவுள்ளவருமாகிய திரு. வே. மாணிக்கவாசகரவர்கட்கு அரசினர் சமாதான நீதிவான் பதவியளித்து அவரைச் சன்மானித்துள்ளாரென அறியலானோம். இவர் ஆசிரியர் ம. க. வேற்பிள்ளையவர்களின் இரண்டாம் புதல்வர்; ஆங்கிலந் தமிழென்னுமிருமொழிகளையும் நன்கு பயின்றவரும் சிறந்த சைவாபிமானியாக விளங்கியவரும், சமாதான நீதிவானும் இராசவாசல் முதலியாருமாகவிருந்த S. சபாரத்தின முதலியாரவர்களுக்கு இவர் மருகராவர். திரு. மாணிக்கவாசகர் யாழ்ப்பாணச் சங்கத்தின் தனாதிகாரியாகக் கடமைபார்த்தும், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதிகார சபையங்கத்தவர்களுளொருவராயும் பொதுக்கருமங்களில் ஈடுபட்டு உழைத்து வருகின்றார். இவருக்கு அரசினர் இப்பதவியையுதவியது பாராட்டற்பாலதாம்.

## கள்ளமாக அரிசிஏற்றிச் செல்லும் பெண்கள்

### மட்டக்களப்புப் பகுதியிற் பல வழக்குகள்

மட்டக்களப்பு, அக் 20

கோட்டைமுனையைச் சேர்ந்த தங்கம்மா என்னும் ஸ்திரீ 5 கொத்து அரிசியைக் கள்ளத்தனமாக ஏற்றிச் சென்றதாக மட்டக்களப்புப் பொலிஸ்கோட்டில் ஒப்புக்கொண்டார். விசாரணையின்பின், நீதிபதி எதிரியைக் குற்றவாளியெனக் கண்டு ரூ 15 அபராதம் விதித்தார்.

மட்டக்களப்பைச் சேர்ந்த வெள்ளைச்சி என்னும் மற்றொரு பெண்ணுக்கும் அதே மாதிரியான குற்றத்துக்காக ரூ 15 அபராதம் விதிக்கப்பட்டது.

கணபதிபெரியான் என்னும் மட்டக்களப்பு வாசிக்கு ரூபா 15 அபராதம் விதிக்கப்பட்டது. இவர் 8 கொத்து நாட்டரிசியைக் கள்ளத்தனமாக ஏற்றிச் சென்றதாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

### பாற்குவனையில் அரிசி

குருநாதி சுப்பையா என்னும்மட்டக்களப்பு வாசி 14 கொத்து நாட்டரிசியைக் கள்ளமாகக் கொண்டு சென்றதாகப் பொலிஸ் கோட்டில் ஒப்புக்கொண்டார். இவருக்கு ரூ. 20 அபராதம் விதிக்கப்பட்டது. எதிரி பாற்குவனையில் அரிசிஏற்றிச் சென்றதாகச் சொல்லப் படுகிறது.

### றெயில் மோட்டாரிற் கண்டு பிடிக்கப்பட்ட அரிசி

இரண்டரைக்கொத்து நாட்டரிசி கொண்ட மூடையொன்று வாழைச்சேனைக்கும் மட்டக்களப்புக்குமிடையே போக்குவரத்துச் செய்யும் றெயில் மோட்டாரிற் கண்டு பிடிக்கப்பட்டது. அரிசியின் சொந்தக்காரர் கண்டுபிடிக்கப் படாமையால், குறித்த மூடை மட்டக்களப்புப் பொலிஸ்கோட்டிற் கொண்டுபோகப்பட்டது. அரிசியைப் பறிமுதல் செய்யும்படி நீதிபதி உத்தரவிட்டார்.

# இலங்கையில் பத்தினி வழிபாடு.

கோட்டாஞ்சேனை—திரு. வை. முத்துக்குமாரசுவாமி எழுதியது

மகாநுவரை எனப்படும் கண்டி மகா நகரத்தில் ஆண்டுதோறும் ஆவணி மாசத்தில் "பெரஹரா" எனப்படும் பவனி நடைபெற்று வருகிறது. அப்பவனியில் நான்கு தேவாலயங்கள் பங்கு பற்றுகின்றன. முதலாவது பவனி நாததேவியோக்கு உரியது. இத்தெய்வம் அடுத்தாற்போல புத்தர் பதவியைத் தரிசிக்கும் என்று பௌத்தர் நம்புகின்றனர். இரண்டாவது பவனி விஷ்ணுவுக்குரியது. மகாவம்சத்தின்படி, விஷ்ணு இலங்கையைச் சிறப்பாகக் காவல் பூணுகிறவர். மூன்றாது பவனி கதிர்காமத்தேவியோவுக்கு உரியது. துட்டகைமுனுவே கந்தக் கடவுளுக்கு கோவில் அமைத்தான் என்று கந்த உபத என்னும் சிங்களநூல் கூறுகிறது. நான்காவதும் கடைசியுமான பவனி பத்தினிதேவியோவுக்கு உரியது. இப்பவனிகளை 'எசலப் பெரஹரா' அல்லது "கடவுளர்களின் விழா" என்று கூறுவர். பத்தினி தேவியோ வழிபாடு கண்டிப் பெரஹராவில் முக்கிய அம்சம் பெறுகின்றது. பத்தினியின் சிலம்பு அலங்கரிக்கப்பட்ட யானைமீது வைத்து, அப் பத்தினியைப் பூசிப்பவராகிய பத்தினிஹாமி பயபக்தியுடன் கொண்டு செல்வர். வேப்பிலை பத்தினிக்குப் பிரியமான பொருள். சிலம்பு ஒலிக்கப்படுகிறது. இது ஓர் ஆசீர்வாதமாம். இப் பத்தினி வழிபாட்டின் உற்பத்தியைப்பற்றி ஆராய்தல் நன்று. ஈண்டு இதைப்பற்றி ஆராய்வாம்.

கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் வங்க நாசிகன் என்னும் சிங்கள மன்னன் அநுராத புரத்தில் ஆட்சி செய்தான். அப்பொழுது கரிகாற் சோழன் பெரிய சேனையுடன் இலங்கையில் வந்திறங்கி வங்க நாசிகனுடன் போர்தொடுத்து வெற்றி பெற்றான். 12,000 ஈழத்து மக்களைச் சிறைசெய்து, காவேரியாற்றங்கரைக்கு அணைகட்ட இவர்களைக் கொண்டு போனான். கரிகாற்சோழன். அச்சோழன் இறந்த பின்னர் பெருங்கிள்ளி என்பவனே சோழ இராச்சியத்துக்கு உரிமையுள்ளவன். இவன் சேரன் செங்குட்டுவனின் மைத்துனன். ஒன்பது சோழ அரசகுமாரர்கள் பெருங்கிள்ளிக்கு மாறுகப் போர்புரிந்தனர். இறுதியில் வியலூரில் நடந்த போரில் தோற்றனர். சேரன் செங்குட்டுவனின் உதவியால் சோழ அரசைப் பெருங்கிள்ளி பெற்றான். இக்காலத்திற்றான் சிலப்பதிகாரத்திற் கூறிய சம்பவங்கள் நடைபெற்றன. சேரன் செங்குட்டுவன் திருச்செங்குன்றுக்குச் சென்று கண்ணகிக்குக் கோவில் எழுப்பி, இமய மலையிலிருந்து கற்கொண்டு வந்து நீர்ப்படைவிழாச் செய்தான். பத்தினிக்கடவுளாகிய கண்ணகி பிரசன்னமாகி தம்மை வழிபடுவோரெல்லாம் விரும்பிய வரப்பிரசாதங்களை அளித்தது. கண்ணகி அம்மனின் பேராற்றலைக் கேட்ட கயவாகு மன்னன திருச்செங்குன்றுக்குச்சென்று அங்குள்ள புதுமைகளை நேரே பார்த்து புளகாங்கிதம் கொண்டு கண்ணகிப் பத்தினியின சிலம்பு முதலியவற்றைக் கொணர்ந்தான் என்று சிலப்பதிகாரத்து உரைபெறுகட்டுரையாலும், இராசவழியாலும் அறியக்கிடக்கின்றன.

1-ம் கயவாகு மன்னன் (கி. பி. 113—135) இராச கட்டிலில்வீற்றிருந்தான். இவனே கண்ணகி வழிபாட்டை இலங்கைக்கு முதன்முதல் கொணடு வந்தவன. அரசன் எவ்வழியோ அவ்வழியே பிரசைகளும் எனபது பழமொழி. அவ்வாறே மன்னனும் மக்களும் கண்ணகிக்கு ஊர்கள்தோறும் கோவில்கள் அமைத்து பூசையும் பொங்கலும் வைத்து வழிபட்டனர். ஈழ மண்டலத்தில் வடபாகத்தில் மேற்பாற்கடல் தொடக்கம் கீழ்ப்பாற்கடல் வரைக்கும்உள்ள நாடுகளிலும் சோலைகளிலும் கண்ணகிப் பத்தினி காட்சி கொடுத்து வைசூரி, முத்து முதலிய நோய்கள் வாராமல் காத்து வருகின்றார். தமிழிலுள்ள பழைய ஏடுகளின்படி, திருகோணமலைக்கு ஐந்து மைலுக் கப்பாலுள்ள பாலம்பட்டாறு என்னும் ஊரில் உள்ள கண்ணகிகோவில் கயவாகு மன்னனால் கட்டப்பட்டது. இக்கோவிலில கண்ணகிசிலை தாபித்துக் காலக்கிரமமாகப் பூசையும் விழாவும் நடப்பித்து வந்தான். இன்றும் அங்கு ஒழுங்காகப் பூசை நடைபெறுகிறது. இப்பகுதியில் தம்பலகாமம், கொட்டியாரப் பற்றில் சீலாப்பழை, பாண்டிருப்பு, எருவில், ஆரையம்பதி கொட்கட்டி, மண்டூர், பழுகாமம், காரைதீவு, தம்பிலுவில் முதலிய ஊர்களில் கண்ணகிப்பத்தினிக்கு அமைத்துள்ள புராதன கோவில்கள் இருக்கின்றன.

அத்தலங்களிலே மந்தைகள் மேய்க்கும் சிறுவர்களை, "மக்காள் வாருங்கள்" என்று அழைத்து வெள்ளை வஸ்திரந்தரித்த மூதாட்டி வடிவங்காட்டி, திருவிளையாடல்கள் புரிந்து பத்தினி தேவியார் இறுதியில் மட்டக்களப்புப் பகுதியில் உள்ள வந்தாறு மூலையென்னும் பதியில் வீற்றிருந்தார் என்று கர்ண பரம்பரைக்கதை இருக்கிறது. வந்தாறு மூலையென்பது கண்ணகி வழி நடந்து வந்து களையாறி இருந்த மூலை என்ற பொருளாம். கண்ணகிப்பத்தினி வழிபாடு பிற்காலத்தில திரௌபதிப் பத்தினி வழிபாட்டுடன் கலந்துவிட்டதாகத் தெரிகிறது. இன்றும் ஆடி அமாவாசைத திருநாளதோறும் "பூமிதத்தல்" என்று கூறப்படும் நெருப்புக் குளித்தல் பாண்டிருப்பு, மண்டூர் முதலிய தலங்களில்—பத்தினி கோவில்களில்—இன்றும் நடைபெற்று வருகின்றன. தம்பிலுவில என்னும ஊர்கீழ்க்கடற்கண் திருக்கோவிலுக்கு வடக்கே இருக்கிறது. இங்குள்ள சனங்கள் பொன்னால் செய்யப்பட்டபூ உருவத்தை வைத்துக் கண்ணகிப் பத்தினியெனக்கருதி வழிபட்டு வருகின்றனர். அக்கோவில "பட்டு மேட்டு அம்மன்" கோவில் எனப்படும். தம்பிலுவில் வேளாண்மை இல்லாமற்போக, பக்தர்கள் கண்ணகியை நோக்கி இப்பதிகம் படித்துவேண்ட அம்மன அருளால் மழைபெய்து வேளாண்மை பலித்தது என்று அவ்வூர் வாசிகள் கூறுவர். அப்பதிகத்தின் ஒரு பகுதி இது:—

1-ம் வரி

"மலரழக மது குலைய வண்ண
முறு மடைதுவள

கடைசி வரிகள்

"பட்ட மரமானது தழைத்து
வளராதோ
பழமை சிறு கிழவமார் இளமை
பெறுவாரோ
விட்ட வெளி யும் முறுவிளைச்சல்
விளையாதோ
திட்டமுடன் உன்கிருபை வைத்
திடவையாளும்
சீருலவு தம்பிலுவில் வாழு
மாதாவே"

முல்லைத்தீவுப் பகுதியைச் சார்ந்த வற்றாப்பளையில் அற்புதமான பழைய கண்ணகி அம்மன் கோவில் உண்டு. இத்தல உற்பத்தியைப்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

# எங்கள் தமிழ் நாடு!

(தென்புலோலியூர்—திரு. மு. கணபதிப்பிள்ளை அவர்கள்)

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே
தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு—
நெஞ்சை
அள்ளும் சிலப்பதிகாரமென்
றோர்மணி
ஆரம் படைத்த தமிழ்நாடு"
—பாரதியார்.

பலவேறு சமயத்தினரும் திருவள்ளுவரைத் தங்கள் தங்கள் சமயத்தினரென்று போற்றக்கூடிய நிலையில் திருக்குறள் அமைந்திருக்கின்றது. ரஷ்யாவின் புது உலக அமைப்பில், இறந்திருக்கும் மதத்திருக்கும் இடமில்லாமற் போனதுபோல, சாதிப்பிணக்கு சமயப்பிணக்கு முதலான பிணக்குகளுக்கு வழிகோலாமற் பாடப்பட்டது திருக்குறள். பல பாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றது. சிறந்த ஒழுக்க முறையைக் கற்பித்துக் கொண்டிருப்பதினாலேதான் அது அவ்வளவாகப் போற்றப்படுகின்றது.

தமிழ்நாட்டைப்பற்றிப் பாரதியார் பாடுகிறார். உலகிற்குப் பிரசித்தமாகத் தெரியாதவன் ஒருவனைப் பற்றிக் கூறும்பொழுது, நாம், "அவன்......அந்த.......கதர்த்துணி அணிந்தவன்........ இன்னாருடைய தகப்பன்" என்று கூறி ஏதோ விதமாக அறியச் செய்வதுபோல, பாரதியாரும் வள்ளுவர் பெயரினைக் கூறித் தமிழ் நாட்டினை யாவரும் அறியச் செய்கிறார். தமிழ் நாட்டைப்பற்றிக் கேள்விப்படாதவரும் வள்ளுவரைப்பற்றிக் கேள்விப்பட்டிருப்பார்கள் என்பது அவர் கருத்து. யாழ்ப்பாணத்தைப்பற்றிக் கூறுபவர்கள் "நாவலர் பெருமானைப் பெற்றநாடு" என்று கூறுவதுபோல "வள்ளுவரை உலகினுக்கே தந்த நாடு" என்று கூறுகிறார். அந்த நாடு "வான்புகழ்கொண்ட" நாடாகத்தான் இருக்கவேண்டும். மேகத்தைப்போல் யாதொரு கைமாறும் கருதாது வள்ளுவரை உலகினுக்கே தந்த நாடல்லவா?

தமிழ்நாடு, சிலப்பதிகாரம் என்று தனக்கு ஒரு 'மணி ஆரம்' தானாகவே படைத்து வைத்திருக்கின்றது. பாரதியார் அதை 'மணி' என்றே நிறுத்தாமல் 'மணி ஆரம்' என்று ஏன் கூறினார்? எத்தனையோ தமிழ்மணிச் சொற்சுவை பொருட்சுவைகளை யெல்லாம் சிலப்பதிகாரம் செய்த இளங்கோவடிகள் கண்டார். அவைகள் தனித்தனியே கிடந்தால், சிதைந்து அழிந்தொழிந்துபோய் விடலாம். இப்படிச் சிலப்பதிகாரம் என்னும் நூலாக்கி வைத்தபடியால் ஒன்றும் சிதைவடையவுமில்லை; அழிந்தொழியவுமில்லை. அதையெல்லாம் நினைத்துக் கொண்டுதான் 'ஆரம்' (மாலை) என்றார் பாரதியார். அந்த 'ஆரம்' சும்மா கிடக்க இசையாது. சுரண்டிக்கொண்டிருக்கும். நெஞ்சை அள்ளிக்கொண்டிருக்கும். வெள்ளம் பெருகிப் பாயும்போது தன்னை அணைந்தவற்றை யெல்லாம் அள்ளிக்கொண்டோடுவதுபோல், எந்தப்படித்த—படிக்கும்—நெஞ்சையும் சிலப்பதிகாரம் அள்ளிக்கொண்டே ஓடுகிறது. அதற்காகத்தான் இளங்கோவடிகள் 'மாலை' யாக்கி வைத்தாரென்று சொல்லவேண்டும். சும்மா 'விடுகாலி'யாகத் திரிகிற மாடுகளைப் பிடித்துப் பிணைத்துவிட்டால் அவை அடங்கிவிடுகின்றன. அதைப்போல அந்த மணிகளையெல்லாம் பொறுக்கியெடுத்து 'ஆரம்' ஆக்கிக் கட்டிவைத்தது நல்ல காரியமாகப்போய்விட்டது.—அப்போதுமென்ன...சுரண்டல்தான்! 'கண்ணையும் கருத்தையும் கவர்ந்து இழுத்துத் தன்னைக் கைவிடாதிருக்கச் செய்கின்ற ஒருநூலை நளபாகமான ஒரு சம்பிரம விருந்துக்கு ஒப்பிடலாம்' என்று சொல்லுகிறார்கள். சிலப்பதிகாரம் அப்படியான ஒரு நூல்தான். அல்லாவிட்டால், பாரதியார் படைத்த கதைபேச என்ன அவசியம் உண்டாயிற்று?

பாரதியார் கூறுகின்ற—நாங்கள் இருப்பிடமாய்க்கொண்ட-தமிழ்நாடு மிகமிகப்பழைய காலத்திலேயே அதி சிறந்த நாகரிக மடைந்திருந்தது. மேலைத்தேய மக்களின் வரலாற்று நூல்களிற் கூறப்படுவதுபோல—இன்னகாலத்துத் தமிழர் அநாகரிகராய், மிருகத்தன்மை வாய்ந்தவர்களாய், இருந்தார்கள்—இன்னகாலத்து இவ்வாறாக நாகரிக வாழ்க்கையிற் றலைப்பட்டார்கள் என்று கூற முடியாது. சரித்திரத்திற்கு அப்பாற்பட்டதாய் இருக்கின்றது நமது தொன்மை.

கி. பி. 55 ஆண்டளவில் ரோமாபுரியிலிருந்து யூலியஸ் சீசர் இங்கிலாந்திற்குப் படையெடுத்துச் சென்றபோது கண்டதென்ன! மாட மாளிகைகள் நாடு நகரங்கள் ஒன்றுமில்லை. நாடு காடாய்க் கிடந்தது. மக்கள் மிருகங்களேபோன்று காணப்பட்டார்கள். இன்று (போருக்குமுன்) நாம் காண்பதென்ன? காடுகள் நாடாயின. 'நாகரிகம்' மேலோங்கிற்று. ஆகவே, நாம் அறிவிற் குறைந்தவர்கள், நாகரிகமற்றவர்கள், கருநிற மனிதர்கள் எனப்பட்டோம், வெள்ளையர் தமக்கு ஒரு சட்டம் எமக்கு ஒரு சட்டம் புறம்புபுறம்பாக வகுத்துக்கொண்டார்கள். நாகரிகம்—சீர்திருத்தம்—என்பது ஏதோ தப்பித்தவறி அழகு பொருந்தித் தோற்றந்தரும் சில சம்பவங்களின் கூட்டுத்தொகை என்றே அவர்கள் நினைக்கிறார்கள். நாங்கள், அதை எங்கள் சமூக வாழ்வில் தோன்றி எங்களை ஒழுக்கத்தின்பாற் செலுத்தக்கூடிய சக்திவாய்ந்ததொன்றாகக் கருதுகிறோம்.

"civilisation-நாகரிகம்" என்போம்.

'நாகரிகம்' என்பது வடசொல். நமது தமிழில் 'ஊராண்மை' எனலாம். இது ஒரு சமுதாயப்பண்பு. ஊண் உடைகளிலும் வேறு புறத்தோற்றங்களிலுமிருந்து நாகரிகநிலையைக் கணிக்கக்கூடாது, ஊண் உடையாதியன காலம் இடங்களுக்கேற்ப வேறுபடுவன. ஆகவே, கலையுணர்வு ஒழுக்கநிலை முதலியவற்றை நோக்கியே அவ்வவர் நாகரிகநிலையை அளந்தறிய வேண்டும்.

நமக்குச் சரித்திரம் சான்றுபகரவேண்டியதில்லை. மொழியமைப்பே எமது நாகரிகத்தைக் காட்டுவதாகும். மேலை நாட்டார் இன்று கண்ட விஞ்ஞான உண்மைகளை (சமயக் கொள்கைகள் பற்றிப் பேசவேண்டுவதில்லை.) எமது பாஷையின் சொற்பிறப்பிற் காண்கின்றோம். சத்தம் (ஒலி) அலைகளாலேயே உண்டாக்கப்படுகின்றதென்னும் உண்மையை நம் முன்னோரும் கண்டிருந்தார்கள். ஒரு கல்லைப்போட, நீரில் அலை உண்டாவதுபோலவே நாம் பேசுதல் முதலாய தொழில்களைச் செய்யும்போதும் காற்றில் அலைகள் உண்டாவதைத் தெரிந்த எம் முன்னோர் 'கம்பலை'யை ஒலிப் பெயராக்கினர். காற்றில் அசைவை (நடுக்கம்-Vibration) உண்டாக்குவதால ஒலி பெறப்படுகின்றதென்பதை அவர் கண்டனர். 'கம்புதல் கெம்புதல்' அசைவுப்பொருளுடைம

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

## எங்கள் தமிழ் நாடு!

3-ம் பக்கத் தொடர்ச்சி

லைக் கூர்ந்து நோக்குக. படுதல் நிலத்தோடு வீழ்ந்து தாழல். தரையோடு வீழ்ந்து தாழ்ந்திருந்து கேட்க இனிதாகப் புலமாவதான ஒலியினை 'படுதல்' என்றே வைத்தனர். இதை, விரிவாக எடுத்துக்காட்டவேண்டு அமையாது. '(எமது தமிழ்ச் சொற்சிறப்பு முறை''க் கட்டுரை நோக்குக:) நமது மொழியில் ஒருவரைப் பலர்பாலால் வழங்குகின்ற மரியாதை ஆங்கிலத்தோ வேறெந்த மொழியிலோ இல்லை. பெரியோர் செயலினை 'வந்தருளினார்' 'செய்தருளினார்' என்று கௌரவமாகக் கூறும் மரபும், ஏவுகின்ற வினையின் இழிவைப் குறைக்கும் வியங்கோள்களின் அழகும் வேறெம் மொழியினிடத்தும் இல்லை; எமக்கே சிறப்பாயமைந்தன. இவையெல்லாம் எங்கள் நாகரிகத்தையே காட்டுகின்றன. சரித்திரம் கூறுவனவும் எமது புராதனத்தை நிரூபிக்கின்றன. ஐயாயிரம் ஆண்டுகளின் முன் எம் முன்னோரால் இயற்றப்பட்ட பட்டினமொன்று நிலமாய்க் கிடப்பதை 'மொஹெஞ்சதரோ' என்ற இடத்திற் கண்டுபிடித்து ஆராய்ந்து கொண்டு வருகிறார்கள். தெருக்கள், கால்வாய்கள், பெருந்தொட்டிகள், மதகுகள்—யாவும் அங்கே யிருந்தன. அவர்களுக்குள் கழிநீர்க்குழாய்கள் (Drainage [illegible]) வைக்கப்பட்டிருந்தன; மலங்கழிக்கப் புறம்பான இடம் அமைக்கப்பட்டிருந்தது. நாங்கள் இப்போது உபயோகிக்கும் அளம்பு வல்லைகளைப் போன்ற கொசுவலைகளையும் அந்நகரார் உபயோகித்து வந்ததற்கு நல்ல அறிகுறிகள் கிடைத்திருக்கின்றன. அவர்கள் சமயம், சிற்பம், ஓவியம், கணிதம், மருத்துவம், நடனம், சங்கீதம், வானநூற் புலமையாதிய எல்லாவற்றிலும் தேர்ச்சியடைந்திருந்தார்கள்.

அப்படியான தமிழர்களின் வழித்தோன்றல்களாகிய நாம் எம் புராதனத்தைக்கூட அறியாமல் இருக்கிறோம். வள்ளுவரையும், இளங்கோவடிகளையும், கச்சியப்பரையும், கம்பரையும் பெற்ற தமிழ்நாடு இன்று பேசாதிருக்கின்றது. காரணமென்ன?

——

## இலங்கையில் பத்தினி வழிபாடு.

5-ம் பக்கத் தொடர்ச்சி

பற்றி அழகிய ஒரு கர்ணபரம்பரைக்கதை கூறப்படுகிறது. அது இது. வெண் மணல் திடரில் ஒரு வேப்பமரத்தின்கீழ் சில மந்தை மேய்க்கும் சிறுவர்களை, வெள்ளை வஸ்திரம் தரித்த மூதாட்டியார் அழைத்துப் "பேன் கடிக்கிறது பாருங்கள்" என்றுகூற, அவர்கள் "பாட்டி குனிந்து தலையைக்காட்டு" என்று சொல்லி மயிரை விரித்துப் பார்க்கையில் தலைமுழுதுங் கண்கள் இருக்கக் கண்டனர். அதிசயமும் அச்சமும் கொண்டு தங்கள் மனைகள்தோறும் சென்று சென்று இன்ன இடத்தில் ஒருபாட்டி வந்திருக்கிறா, தலைமுழுதுங் கண்கள் இருக்கின்றன என்றார்கள். அதனைக்கேட்ட அக்கிராமத்தில் உள்ளவர்கள் இது என்ன அற்புதம் என்று வந்துபார்க்கையில் ஒருவரையுங் காணவில்லை. அப்பொழுது ஓர் அசரீரி "யான் கண்ணகி, நீங்கள் எனக்கு இரத்த சமுத்திர நீரைத் தானே எண்ணெயாக விளக்கேற்றிப் பொங்கல் பூசை செய்யுங்கள்" என்று கூறிற்று. சொப்பனங்களிலும் இவ்வாறு காணப்பட்டன. அன்று தொடக்கம் வைகாசி மாதந்தோறும் பௌர்ணிமைக்கு முன்னரும் அன்றும் பெரிய பொங்கலும் பூசையும் நடைபெற்று வருகின்றது. பல அற்புதங்கள் இன்னும் இக்கண்ணகி கோவிலில் காணப்படுகின்றன.

—வரும்

# "உழவுக்குந் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"

கல்கத்தா—போ. சுப்பையாபிள்ளை எழுதியது.

இக் கொடும்போரினால் எங்கு நோக்கினும் மக்கள் பசிக்கொடுமையால் வாடி மாண்டு மடிவதைக் கண்ணால் வங்காளத்தில் பார்க்கின்றோம், ஏனைய இடங்களில் பத்திர மூலமாகப் படித்துக் கேட்கின்றோம். இப் பசியின் கொடுமையால் மக்கள் மரணமடைவதைத் தடுப்பதற்கு அரசாங்கமும் அல்லும் பகலும் ஆலோசித்து வருகின்றது.

நம் இலங்கையிலும் இந்தியாவிலும் பசிப்பிணியை நீக்கிப் பெரும் பயன்களை உண்டாக்கி வைக்கும் ஒப்புயர்வற்ற தொழில் உழவு தொழிலேயாகும். உலகத்தில மற்ற அலுவல்களைப் பார்ப்பவர்களெல்லாரும் உழவு தொழிலைச் செய்யும் குடியானவன் கையையே எதிர்பார்ப்பவர்களாய் இருக்கிறார்கள். எதொழிலைச் செய்தாலும் எவ்வளவு உயர்ந்த நிலையிலிருந்தாலும் எப்படிப்பட்டவர்களுக்கும் பசி இயன்பதொன்று இருக்கின்றதனாலே? பசியெடுத்த வேளையில் உணவு கொள்ளாவிட்டால் உடலம் பதைக்கின்றது, உணர்வு கலங்குகின்றது, ஐம்பொறிகளும் நிலை தடுமாறுகின்றன; உடனே உணவு கொண்டால் உடல் செழிக்கின்றது, உணர்வு தெளிகின்றது. ஐம்பொறிகளும் தமதம் நிலை பிசகாமல் இயங்குகின்றன. ஆகவே, மக்கள் உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாது வேண்டப்படுகின்ற உணவுப் பொருள்களை மற்ற முயற்சிகளிற் புகுந்திருப்பவர்கள் தாமாகவே விளைவித்துக் கொள்ள இயலாமையாலும், குடியானவன் விளைவித்துத் தந்தால மட்டுமே அவற்றைப் பெற்று உயிர்வாழ்பவர்களாய் இருந்தாலும் மற்றத் தொழில்களைப் பார்ப்பவர்கள் எல்லாரும் உழவு தொழிலாளர் உதவியையே என்றும் எதிர்பார்த்திருக்கின்றார்கள். மற்ற முயற்சிகளையெல்லாம் கைவிட்டிருந்தாலும் பயிர்த்தொழில் ஒன்றை மட்டும் மேற்கொண்டு வந்தால் நன்கு பசியின்றி உயிர் வாழலாம், மற்ற முயற்சிகளையெல்லாம் கைக்கொண்டும் பயிர்த்தொழில் ஒன்றை மட்டுங் கைவிட்டால் உயிர் வாழ்தல் முடியாதென்பதை இப்போர் நமக்கு நன்கு வலியுறுத்துகின்றது. நாள் நிறைாகப் பொன்னையும் மணிகளையுங் குவித்து வைத்திருக்கும் பெருஞ் செல்வர்களும் பசியெடுத்த காலங்களில் அறுசுவை யுண்டியைத் தேடுவார்களே யல்லாமல், தமது செல்வப் பொருளை நாடமாட்டார்கள். பொன்னையும் மணிகளையும் விழுங்கிப் பசியாற்ற முடியுமோ? பயிர்நிறைந்த உணவுந் தண்ணீரும் பருகினாலன்றி அப்பசியின் கொடுமை நீங்காதே! ஆதலாற் பசியைத் தீர்த்து உடலை வளர்த்து அதனால் அறிவையும் இன்பத்தையும் மேன்மேற் பெருகச் செய்யும் பலவகை உணவுப் பண்டங்களையும் விளைவித்துத் தரும் உழவு தொழிலின் உயர்ந்தது வேறொன்றும் இல்லையென்பது சிறிது ஆராய்ந்து பார்ப்பவர்க்கும் நன்கு விளங்கற்பாலதேயாம்.

இந்நிலவுலகத்தில் உழவுதொழில் செவ்வையாக நடைபெறுதற்கு நிரம்பவும் ஏற்றதான இடம் நம் இலங்கை இந்திய நாட்டினுஞ் சிறந்தது பிறிதில்லை. யாங்ஙனமெனின், ஞாயிற் குளிர்ச்சியும் ஒன்றினொன்று மிகாமல் ஒத்த நிலையில இருக்கப் பெறுவதும், யாறு ஏரி குளம் கூவல் முதலியவற்றால் நீர்வளம் மிகுதலும், செழுமையாய மேற்கணவாய் மலைத்தொடர்களைச் சுற்றிலும் அடைப்பாகப் பெற்றுள்ளதும், பகலிரவு என்னும் இருபொழுதுகளும் சிறிது ஏறக்குறைய ஒத்து நிற்கப் பெறுவதும் நம் இலங்கைஇந்திய நாடுகளேயல்லாமற் பிறிதில்லையென்பது நிலநூல் வல்லார்க்கு நன்கு விளங்குமாதலின் என்க. இத்துணை நீர்வளம் நிலவளங்களை யுடைய இவ்விலங்கை இந்திய நாட்டிலுள்ள நம்மக்கள் உழவு தொழிலை மட்டும் செவ்வையாகச் செய்து வருவார்களாயின், இவர்களைப்போற் செல்வத்தாலும் இன்ப வாழ்வாலும் மிக்கவர்களை இந்நிலவுலகத்தில் வேறெங்குங் காண்டல் அரிதாகும். ஆனால் நம் இலங்கை இந்திய மக்களிற் பெரும்பாலர் உழவுத் தொழிலை இழிதொழிலெனக் கருதி உழவு தொழிலை மெல்ல மெல்ல கைநெகிழவிட்டு வருவதோடு, கற்றவர்களாயிருப்பவர் பலத்தை அலுவல்கள் பார்ப்பதிலுங், கல்லாதவர் பலதிறக் கைத்தொழிற்சாலைகளிற் கூலிவேலைகள் செய்வதிலுங் கருத்துடையவர்களாய்ப், பொதுநலங் கருதாது, அவ்வப்போது வருந் தந்நலங் கருதுபவர்களாய், உயர்ந்தநோக்கமின்றிக் காலங்கழித்தலால், உழவு தொழில கைவிடப்பட்டுச் சுருங்கிவர, உலகப் போரும் தொடங்க, உணவுப்பண்டங்களும் அருகிட, அவற்றைப் படுகது உயிர் வாழ்க்கைக்கு வேண்டிய எல்லாப் பொருள்களும் அஃகிவிட்டது, எல்லாரும் மிடியுங் கவலையுந் துன்பமும் உடையவர்களாய்ப் பசிநோய்க்கு இரையாகி இறந்தொழிகின்றார்கள்! ஐயகோ! இவ்வளவு பெருந் துன்பங்களுக்கு ஆளாகியும் இன்னும நம்மவர் கல்லறிவு வரப்பெற்றார்களில்லையே! இத்துணை இடர்களும் எங்கிருந்து வரலாயினவென்று கருதிப்பார்ப்பவர் எவரேனும உளரா?

"உழவினார் கைம்மடங்கி னில்லை
 விழைவதூஉம்
விட்டேமென் பார்க்கு நிலை"

என்னுந் தெய்வத் திருவள்ளுவர் மெய்யுரையைச் சிறிதேனும் எண்ணிப் பார்ப்பவர்எங்கேனும் உளரா? உயர்ந்த அலுவல்களில் அமர்ந்து பெரும் பொருள் தொகுக்க முயல்வார் தொகுதியும், பெரும் பொருள் பெற்றும் அதனை உழவிற்குங் கல்விக்கும் தொழிலுக்கும் பயன்படுத்தாமற் கூத்துக்குங் குடிக்கும் போலிப் பட்டப் பேற்றிற்கும் வீண் பெருமைக்கும் வேசிக்கும் அழிப்பார் குழாமும், செந்தமிழ்ப்பயிற்சியையும் உழவு தொழிலையும் இழித்துரைக்குஞ் செல்வர் பெருகினமையே நம்மக்கள் பசிப்பிணிக்குக் காரணமாகியதெனலாம்.

இவ்விலங்கை இந்திய நாட்டைத் தவிர உலகத்தில் உள்ள மற்ற நாட்டவர்களெல்லாரும் கலவியிலும் ஒற்றுமையிலும் பொதுநல முயற்சியிலும் நாளுக்குநாள் மேம்பட்டு உழவையுங் கைத்தொழிலையுங் கொண்டு விற்றலையும் பெருகச் செய்து இன்புற்று வாழ்வதை நேரே கண்டும், நம் இலங்கையரும் இந்தியர்களும் இன்னும் நல்லுணர்ச்சி வரப்பெறாமலும் உழவுதொழிலைப் பெருக்காமலும் ஒருவரோடொருவர் அன்போடளவளாவி ஒற்றுமையாயிராமலும் ஒவ்வொருவருந் தம்மைத்தாமே உயர்ந்தவராகக் கருதி இறுமாந்து ஒழுகித் தம்மையுங் கெடுத்துப் பிறரையுங் கெடுத்து நாளுக்குநாட் குறைவடைந்து போதலை நினைக்குந்தோறும் நெஞ்சை நீராய் உருக்குகின்றதே! ஓ எம் இலங்கை இந்திய மக்களே! நீங்களும் உங்கள் கால்வழியும் மற்ற நாட்டவரைப் போலவே எல்லாச் செல்வங்களும் பெற்று இன்பத்தோடு பசியின்றி நீண்டகாலம் உயிர்வாழல் வேண்டின், தெய்வீக கவி பாரதியார் "உழவுக்குந் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்—" என்று கூறுவதைச் சிறிது செவிசாய்த்துக்கேட்டு அதன்படி நடக்க முந்துமின்! உழவுத் தொழிலைத் தாழ்வாக நினைந்து அதனைக் கைநெகிழ விடாதீர்! உழவு தொழிலை முன் வைத்து அதனை நாளுக்குநாட் சிறக்கச் செய்து அதன்பின் மற்றைத் தொழில்களைப் பார்க்க முயலுங்கள்! எல்லாச் செல்வங்களிலும் நிலைபானதும் அழியாததுமாகிய கல்விச் செல்வம் ஒன்றே என்பதைக் கடைப்பிடித்து, நம் வருங்காலத் தாய்மார்களுக்கு தாய் மொழியாகிய தமிழ்மொழி வாயிலாகவும் அதன்பின்னர் ஆங்கிலமொழி வாயிலாகவும் இக்கால இயல்புக்கு ஏற்றபடி பலவகையிலும் பயன்படுமாறு யாழ்ப்பாணம் சைவமகளிர் கல்லூரியை ஆரம்பித்தவர்களாகிய யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதிகாரசபையாரைப் பாராட்டி, உங்களால் ஆனமட்டும் பொருளுதவி புரிந்து யாழ்ப்பாணத்திலுள்ள ஏனைய பெண் கல்லூரிகட்கெல்லாம் பின்பற்றத்தக்க ஒரு கலாசாலையாகச் செய்யுங்கள்! அறிவும் ஒழுக்கமும் பொதுநல முயற்சியும உடையாரே உயர்ந்தோராவரென்பதைக் கடைப்பிடியாக நுங்கள் உளத்திற் பதியவைத்தும், பிறப்பளவில் உயர்வு தாழ்வு பாராட்டும் பேதமைச் செயலை அறவே ஒழித்திடுமின்கள்! எல்லாரோடும் அன்பாலளவளாவி ஒருவர்க்கொருவர் உதவியாய் ஒற்றுமையுற்று வாழ உளங்கனிந்தெழுமின்கள்! இவைகளைக் கருத்திற் பதித்து ஒழுகாத வரையில நம் இலங்கை இந்தியாவிலுள்ள மக்களாகிய நீவிர ஏனை நாட்டவரைப் போல முதன்மை பெற்று விளங்கல் எஞ்ஞான்றுமில்லை, இந்நலங்களால் உயர்ந்து முதன்மை பெற்றுத் திகழும் ஏனை நாட்டவர்க்கு நீவிர் அடிமைகளாய்க் கிடந்து வருந்தி யொழிதல் வாய்ப்புடைத்தேயாம். அது நிற்க,

உணவுப் பொருள்களை ஏராளமாய்ப் பெருக்கும் உழவு தொழில் ஒன்று மட்டுஞ் செவ்வையாக நடக்குமாயின், எல்லா நாட்டவர் செல்வமும இவ்விலங்கை இந்திய நாடுகளில் தாமே வந்து குவிந்து விடுவதோடு எம்மைப் பிடித்த பசிப்பிணியும ஒழிந்துபோம். இது தெரிந்த பொருட்டன்றே தெய்வப் புலமைத் திருவள்ளுவனாயனார்,

"சுழன்றும் ஏர்ப் பின்ன துலகம்
 அதனால்
உழந்தும் உழவே தலை" என்றும்,
"பலகுடை நீழலுந் தங்குடைக்கீழ்க்
 காண்பர்
அலகுடை நீழ லவர்" என்றும் அருளிச் செய்தார்.

ஆகையால், கைத்தொழில்கொண்டு விற்றல் முதலான மற்றை முயற்சிகளைச் செய்பவர்களுங்கூட உழவு தொழிலைப் பெரிதாய் எண்ணி அதனைத் தாமுமடத்துதற்கான வழிகளெல்லாம் திறப்பித்தல் வேண்டும்.

## மிளகாய்த்தூள் இறக்குமதி

மிளகாய்த்தூள், மசாலாத்தூள் ஆகியவற்றை இறக்குமதி செய்வது சம்பந்தமான விதிகள் சென்றஞாயிற்றுக்கிழமை இரவு வெளியான விசேஷ கஸெற்றிற் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன. குறித்த விதிகளின் படி, மிளகாய்த்தூள், மசாலாத்தூள் ஆகியவற்றை இறக்குமதி செய்ய அநுமதிக்கப்படுபவர்களுக்கு "லைசென்ஸு"கள் வழங்கப்படும்.

## கொழும்புவிவேகானந்த சபையில்நவராத்திரிபூசை

மேற்படி சபையாரால் நடத்தப்படும் வித்தியாலயத்தில் 29-9-43 புதன்கிழமை மாலை 7 மணியளவில் வழக்கம்போல் நவராத்திரி பூஜை ஆரம்பமாயிற்று. அன்று தொடக்கம் ஒன்பதுநாளும் பூஜை ஆராதனை என்பன ஒழுங்காய் நடைபெற்றுவந்து இறுதிநாளாகிய7-10-43வியாழக்கிழமை மாலை 6 மணியளவில் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அத்தருணத்தில் வித்தியாலயமாணவர்கள் தோத்திரப் பாடல்கள் பாடியும், கும்மி கோலாட்டம் முதலிய களியாட்டுக்கள் செய்தும் சபையோரைமகிழ்வித்தனர். வித்துவான் வ. மு. கனகசுந்தரம்பிள்ளை அவர்களும், திருவாளர் அ. வி. மயில்வாகனம் B. A. அவர்களும் திருவாளர் சிவசுப்பிரமணியபிள்ளை அவர்களும் முறையே சரஸ்வதி பூஜையின் மகிமையைப்பற்றியும், சரஸ்வதிபூசை எவ்வாறு தமிழ்நாட்டில் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றதென்பதைப் பற்றியும், கடவுள் பக்தியே மனிதனுக்கு அவசியம் என்பது பற்றியும ஆராய்ச்சி நிறைந்த அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்கள். அடுத்தநாள் விஜயதசமியன்று காலை விசேஷபூஜை ஆராதனைகளுடன் புதிய பிள்ளைகளுக்கு வித்தியாரம்பஞ் செய்யப்பட்டது. கடித.

## வேவல்பிரபு வைஸ்ராயாக விசுவாசப் பிரமாணம்

### புதுடில்லியில் ஆடம்பரமற்ற வைபவம்

சென்னை, அக் 20

வேவல்பிரபு இன்று காலை இந்திய வைஸ்ராயாக விசுவாசப் பிரமாணஞ் செய்தார். விசுவாசப் பிரமாணச் சடங்கு ஆடம்பரமின்றி வைஸ்ராய்மாளிகையிற் பத்து நிமிஷங்களுக்குள் நடைபெற்று முடிவுற்றது. ஏராளமான பிரமுகர்கள் காக்கி உடையிலும் வெள்ளை உடையிலும் சமுகமளித்திருந்தனர்.

சிவில் அதிகாரிகளும் இராணுவ அதிகாரிகளுமாக ஏறக்குறைய 400 இந்திய, பிருத்தானிய, அமெரிக்க, சீன, நேப்பாள மக்களும் லூயி மவுண்பேட்டன் பிரபுவின் சிப்பந்திகளும் சிம்மாசனத்தின் எதிரில் வரிசையாக வீற்றிருந்தனர். சமஸ்தான மன்னர்கள் பலரும் வைஸ்ராய் நிருவாகசபை] அங்கத்தவர்களும் இரு பக்கங்களிலும் அமர்ந்திருந்தனர். வேவல்பிரபுவும் வேவல் சீமாட்டியும் பரிவாரம் புடைசூழ அங்கு வந்து சேர்ந்தனர்.

## இலங்கையில் 'லெட்பென் சில்' உற்பத்தி

[தொழிற்சாலை அமைக்க முயற்சி

இலங்கையில் 'லெட்பென்சில்' களை உற்பத்தி செய்யும் பொருட்டு ஒரு தொழிற்சாலையை ஸ்தாபிக்க முயற்களெடுக்கப்பட்டுவருகின்றன.

இத்தொழிற்சாலைக்குத் தேவைப்படும் இயந்திரங்களை இந்தியாவிலிருந்து தருவிப்பதற்கு இறக்குமதி 'லைசென்சு'களை இப்போது பெற்றுக்கொள்ளுதல் கஷ்டமாகும்.

அதிக இயந்திரங்கள் குறித்த தொழிற்சாலைக்குத் தேவைப்படாமையால், இவற்றை இறக்குமதி செய்ய முடியுமென்றும், ஆரம்பத் தொழிற்சாலை யொன்றைக் கூடிய விரைவில் ஸ்தாபிக்க முடியுமென்றும் கருதப்படுகிறது.

பென்சிலொன்று ஒன்றரைசத விலையாகுமென்று மதிப்பிடப்படுகிறது.

## பொய்

(திருமயிலை, திருவாளர் சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை)

பொய்யாமை பொய்யாமை
யாற்றி னறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.

சொல்லினால் வருந்தீமைகள் எல்லாவற்றுள்ளும் பொய்பேசுவதினால் வருந் தீமையே பெரிதாம். ஏனெனில், பொய்யினாலேதான் ஏனைய தீமைகள் விளைகின்றன. பொய்யோடு கலவாத தீமை யாது? கொலை, களவு, கள்ளுண்ணல், விபசாரம் முதலிய கூடாவொழுக்கங்களெல்லாம் பொய்யோடு கலந்து நிகழ்பவையே. அவைகளைப் புரியும் பாதகர்கள் பொய்சொல்லக் கூசார்கள். தம்மட்டோடு அமையாது பிறரைக்கொண்டும் பொய்ச் சாட்சியங்கள் செய்விக்கின்றனர். ஒரு பொய்யைச் சாதிப்பதற்குப் பலபொய் வேண்டியதாகின்றது. இப்படி ஒருபொய் பலவாய்ப் பல்கிப் பெருகுகின்றது. இதனால் சொல்லுபவருக்கும் பிறருக்கும் நிகழுந் துன்பங்கள் அளவில.

இப்படி விரிந்து கேடு சூழ்வதும். பாவத்திற்குள்ளாக்குவதுமாகிய பொய்பேசுதலைத் தவிர்க்க முயல வேண்டும். பொய் பேசுவோர் இம்மையிலே அவமதிப்பையும் மறுமையிலே நரக வேதனையையும் அடைவர். பொய் பேசுதலை ஒருவன் நீக்கினால் களவு முதலிய வேறு தீமைகள் தாமே விலகும். நன்மதிப்பு உண்டாகும். நற்கதி பெறலாம். தருமம்தழைக்கும். பொருட்பேறு சித்திக்கும். திருவருள் உண்டாம். ஓர் குறையும் வாராது.

வாய்மையின் வழாது மன்னுயி
ரோப்பு நர்க்கு
ஆவதுமுண்டோ எய்தாவரும்
பொருள்

என்னுஞ் சிலப்பதிகாரச் செய்யுள் இவ்வுண்மையை விளக்கும்.

## கடிதம்

இந்துசாதனப்பத்திராசிரியர் அவர்கட்கு: —

ஐயா!

J/வேலணைத்துறை ஐக்கிய சங்கம் இப்போ சில நாட்களாக வேலணைத்துறையடியில் வசிக்கும் நூறு பேருக்கதிகமான அங்கத்தவர்களையுடையதாய் வளர்ந்து வருகின்றது. இச்சங்கத்தின் முக்கிய நோக்கம் என்னவெனின், அங்கத்தவர்களிடம் ஐக்கியத்தைப் பிறப்பிப்பதும் அதனால ஓர் ஐக்கியபண்டக சாலையைத் தாபிப்பதுமே. ஐக்கியபண்டக சாலைகளினுல் சில இடங்களில் நன்மைகள் வளருகின்றன. ஆனால் ஐக்கிய பண்டக சாலைகளிலாத இடங்களிலோ ஒருபொருள் வாங்கப் புகின் அதிக மடங்கு விலை கொடுக்கவேண்டியிருக்கிறது. இப்படிவரும் இடையூறை நீக்குவதற்கு ஓர் ஐக்கிய பண்டக சாலையைத் தாபிப்பதே சிறந்த வழியெனவெண்ணி அதற்குரிய ஓர் சங்கத்தைக் கூட்டியிருக்கிறோம். ஏழைமக்கள் ஒருங்கு சேர்ந்து உண்டாக்கிய இச்சங்கத்தை ஐக்கியசங்க மேற்பார்வைக்காரர் ஆசீர்வதிப்பாராக. அதனால ஏழைமக்கள இன்னல் நீங்கி இனிது வாழ்வாராக,

இங்ஙனம்,
க. பேரம்பலம்,
வேலணை 'ஆயம்'

## தமிழைக் கட்டாய பாடமாகச் செய்ய முடிவு

### 1945-ம் ஆண்டுமுதல் நடைக்கு வரும்

இலங்கையில் நடைபெறும் பரீக்ஷைகளிலெல்லாம் தமிழும் சிங்களமும் பிரதான ஸ்தானம் வகிக்கவில்லை. ஸ்தல பரீக்ஷைகளுக்கு வரும் மாணவர்கள் ஒவ்வொருவரும் சிங்களம் அல்லது தமிழ் கட்டாயபாடமாகப் படித்திருக்கவேண்டுமென்று நிபந்தனை ஏற்படுங்காலம் இன்னும் அதிகதூரத்திலில்லை.

1945-ம் வருடம்முதல் சிரேஷ்டதாரதப் பரீக்ஷையில் வரும் மாணவர்களில் தமிழையாவது, சிங்களத்தையாவது பரீக்ஷைப் பாடமாக எடுத்துக்கொள்ளாத மாணவர்கள் பிரத்தியேகமாக அப்பாஷைகளில் ஏதாவது ஒன்றில் பரீக்ஷை கொடுக்கவேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இப்பிரத்தியேகப் பரீக்ஷையில் மாணவரின் திறமை சோதிக்கப்படும்.

லண்டன் மற்றிக்குலேஷன் பரீக்ஷை இப்பொழுது நிறுத்தப்பட்டுவிட்டமையால் இனி சிரேஷ்டதாரதப் பரீக்ஷையே பிரதானமாகும். இரண்டாவது பாஷையாக இப்பொழுது லத்தீன், கிரீக் முதலிய பாஷைகள் பரீக்ஷைகளில் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்தகைய அந்நிய பரீக்ஷைகளுக்குப் பதிலாக, இப்பரீக்ஷைக்குத் தோன்றும் மாணவர்கள் தமிழையாவது சிங்களத்தையாவது இரண்டாவது பாஷையாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதே புதிய ஏற்பாடு.

இப்புதிய ஏற்பாட்டால் பள்ளிக்கூடங்களுக்குக் கஷ்டமேதுவும் ஏற்படக் காரணமில்லை. ஏனெனில், அண்மையிற் சிறிது காலமாகப் பள்ளிக்கூடங்களில் இவ்விரு பாஷைகளையும் மாணவர்களுக்குச் சொலலிக்கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டு வந்திருக்கின்றது

தமிழ், சிங்களப் பாஷைகள் விஷயமாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் இப்புதிய ஏற்பாட்டைக் கல்வியதிகாரிகள் கொழும்பிலுள்ள பெண் கல்வி ஸ்தாபனங்களின் தலைவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கின்றனர்.

## கொழும்புத் தமிழ்க்கழகம்

சென்ற ஞாயிற்றுக்கிழமை (10-10-43) பிற்பகல் 5-45 மணிக்கு கொழும்புத் தமிழ்க்கழக மண்டபத்தில் ஸ்ரீ கே. என். அருணந்தி "பாரதப்பண்பு" என்ற விஷயம் பற்றிப் பேசினர். தாம் கண்ட அநுபவத்தை அப்படியே மற்றவர்களும் பார்த்து அநுபவிக்கக்கூடிய விதமாய்ச் சொல்லாற் சித்திரிப்போர் உயர்ந்த கவிகளென்றும் அத்தன்மை வில்லிபாரதத்தில் உண்டென்றும பலபாட்டுக்களை எடுத்துக் காட்டி விளக்கினர். திரௌபதி மாலையிட்ட சருக்கத்தில் அவர் விசேஷ கவனஞ் செலுத்தினர். விரிவுரையின்பின் ருசிகரமான ஆராய்ச்சி நடந்தது. வித்வான் கனகசுந்தரம்பிள்ளை டாக்டர் நல்லநாதன், வ. வி. மயில்வாகனம், சோ. நடராஜன் ஆகியோர் வாதத்திற் பங்குபற்றினர். கூட்டத்திற்கு திரு. ஆ. சபாரத்தினம் தலைமை வகித்தார்.

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் எழுதிவரும் "பண்டைத் தமிழர் சரித்திரம்" என்ற நூலைக் கழகத்தின் முதல் வெளியீடாகப் பிரசுரிக்க நிர்வாகசபை தீர்மானித்திருக்கிறதெனக் கழகக் காரியதரிசி சோ. நடராஜன் அறிவிக்கிறார்.

## யாழ்ப்பாண நகரசங்கம் விளம்பரம்

இதன்பின்னும் சொல்லப்படும் சந்தைகளும் காலையும் பெரியகடைக்குக்கிட்ட இருக்கும் பஸ் ஸ்ரான்டும் 1944ம் ஆண்டு தைமாதம் 1ந் திகதி தொடக்கம் ஒரு வருஷத்திற்குக் குத்தகையாகக் கொடுப்பதற்குக் கேள்விப்பத்திரங்கள் அழைக்கப்பட்டு இருக்கின்றன. 1ம் 6ம் குத்தகைகளுக்கு 500 ரூபாயும் 2ம் 3ம் 4ம் குத்தகைகளுக்கு 250 ரூபாயும் மற்றச்சந்தைகளுக்கு 50 ரூபாயும் கட்டி எடுத்த போமில் கேள்விகேட்க வேண்டும். கேள்விப்பத்திரங்கள் ஒரு கடுதாசிக் கூட்டில் அடைக்கப்பட்டுக் கூட்டின் மேல் பக்கத்தில் இடதுபுறமாய் சந்தைக்குத்தகையின் கேள்விப் பத்திரமொன்று எழுதி அதை நகரடீஸ்திறிக் சங்கத் தலைவருக்கென விலாசம்போட்டு 1943ம் ஆண்டு கார்த்திகை மீ 5ந் திகதி வெள்ளிக்கிழமை பகல் 12 மணிக்குப் பிந்தாமல் நகரசங்கக் கந்தோருக்கு அனுப்பப்படல்வேண்டும். ஒவ்வொரு குத்தகைக்கும் பிறம்பான கேள்வி கேட்கவேண்டும். தெரியப்பட்ட கேள்விக்காரன் சங்கத்தலைவரால் நியமிக்கப்படும் தொகையைத் தெரியப்பட்ட திகதி தொடக்கம் 3 நாளைக்குள் கட்டவேண்டும். சங்கத்தால் அவருடைய கேள்வி ஏற்கப்பட்டபின் குத்தகைக்காரன் 1943ம் ஆண்டு மார்கழி மாதம் 10ம் திகதிக்கு முன் கேள்வித் தொகையில் மூன்றில் ஒன்றில் முன் கட்டப்பட்ட தொகையை நீக்கி மிகுதித் தொகையை முழுமையாகவே 5ம் 7ம் 8ம் 9ம் சந்தைகளுக்குக் கட்டவேண்டும். மற்றச் சந்தைகளுக்கு முன் கட்டப்பட்ட தொகையை நீக்கி மிகுதித் தொகையைக் கட்டவேண்டும். அத்துடன் நொத்தாரிசுச் செலவும் முத்திரையும் தான் பொறுத்து 1943ம் ஆண்டு மார்கழிமாதம் 10ம் திகதிக்குமுன் பிணை உறுதியும் எழுதிக்கொள்ள வேண்டும். இதன் நிமித்தமாக 1ம் 2ம் 3ம் 4ம் 6ம் குத்தகைகளுக்குக் கேள்வி கேட்கும் போதுக்குக் கட்டும் காசுடன் இன்னும் ஒரு 150 ரூபாய் ஒவ்வொரு குத்தகைக்கும் கட்டவேண்டும். அப்படிக் காசுகட்டத் தவறினால் போம் கொடுக்கப்படமாட்டாது.

மிகுதியான தொகையை 8 சரிபங்காய்ப் பிரித்து 8 மாதத்தில் கட்டவேண்டும். ஒவ்வொரு மாதமும் 15ந் திகதிக்கு முன் கட்டவேண்டும். முதல்கட்டு 1944ம் ஆண்டு தைமாதம் 15ந் திகதிக்கு முன்னும் குத்தகையைப்பற்றிய விபரங்கள் அடங்கிய கொந்திசில் சொல்லிய பிரகாரம் கட்டவேண்டும். அப்படிக் காசுகட்டத் தவறினால் அல்லது சொல்லப்பட்ட திகதிக்குள் பிணை உறுதி எழுதப் பிந்தினால் கட்டிய முழுத் தொகையும் பறிமுதலாய்ப்போய்விடும். குத்தகையும் திரும்ப விற்கப்படும்.

சங்கத்துக்கு எந்தக் கேள்வியையாகுதல் அல்லது எல்லாக் கேள்வியையும் விலத்திவிட அதிகாரமுண்டு. கொந்திஸ் கொப்பி இந்தக் கந்தோரில் ஒட்டப்பட்டு இருக்கின்றது. இன்னும் மேலதிகமான விபரங்களை நகரசங்கச் சக்கிடுத்தாரிடம் அறிந்துகொள்ளலாம். சந்தைக்குள் இப்பொழுது அறவிடப்படும் விகிதங்கள் குறைக்கப்படமாட்டாது. சங்கத்தலைவருக்குச் சந்தைக்குள் வெவ்வேறு வியாபாரத்துக்கு வெவ்வேறு இடங்கள் வகுத்துவைக்க அதிகாரமுண்டு. குத்தகைகாறனும் கீழ்குத்தகைகாறனும் சங்கத்தலைவரின் தீர்மானத்துக்குக் கட்டுப்படவேண்டும்.

### சந்தைகள்

1 பெரியகடை (தகரக்கொட்டில்கள் பிறநீங்கலாக) அத்துடன் தகரக்கொட்டிலுக்கும் றோட்டுக்கும் இடையிலுள்ள வெளி இடமும் பிறநீங்கலாக.

2 பெரியகடைக்குக்கிட்ட இருக்கும் மீன் கடையும் (பண்ணைத்துறையில் மீன் விற்கும் இடமும்)

3 சின்னக்கடை— (இறைச்சிக்கடைகள் பிறநீங்கலாக)

4 லைக்குளச்சந்தை இப்போ செங்குந்தர்சந்தை(இரண்டு அறைகளுடனும்)

5 சிவியாதெருச்சந்தை . பாஷையூர் கடற்கரையில் மீன் விற்கும் இடமும் (அறை பிறநீங்கலாக)

6 பெரியகடைக்குக் கிட்ட இருக்கும் காலையும் பஸ் ஸ்ரான்டும்.

7 தட்டாதெருச்சந்தை (சிவப்பிரகாசம் றோட்டு தச்ச ஒழுங்கை சந்தியில் காய் பிஞ்சும் மீன் விற்குமிடமும் பிறநீங்கலாக)

8 முத்திரைச்சந்தை.

9 கொழும்புத்துறைச்சந்தை.

10 நாவாந்துறைச்சந்தை.

க. ஐயாத்துரை
நகரசங்கத்தலைவர்,

நகரசங்கக் கந்தோர்,
யாழ்ப்பாணம், ஐப்பசி௴ 15ந்திகதி 1943ம் ஆண்டு.

Mis 143 25.10.43.

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

(† இசைத்தட்டு)

### செவ்வாய் ஒக் 25

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில்செய்திகள் 8 திருப்புகழ்மணி†8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 நாகபட்டணம் எம் கே நடராஜஐயர் டி. ஏ. சாமி பாட்டு 9 முடிவு.

1 கதம்பம்† 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஸ்ரீரங்கம் செல்லம் வீணை 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 ஸ்ரீரங்கம் செல்லம் வீணை 5-45 இசைப்பயிற்சி 6 நாகபட்டணம் எம் கே நடராஜஐயர், டி ஏ சாமி பாட்டு 6.30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 நாமும் யுத்தமும் பேச்சு 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 ஜயாவின் குடும்பம் 8 மதராஸில் உள்ளபடி (களக்காடு எஸ் ராமநாராயணய்யர் பாட்டு) 9-15 வஸந்தி† 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.45 வல்லி பாரதம் 10-00 இசைவேளை† 10-30 முடிவு.

### புதன் ஒக் 27

காலை 7-45 சீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 திருச்சி வாத்யகோஷ்டி 8-15 ஆங்கிலத்தில செய்திகள் 8-30 எம் எல் ஹரிஹரய்யர் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 எம் எஸ் ஹரிஹரய்யர்பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 கும்பகோணம் சிவவடிவேலுப்பிள்ளை வயலின் 5-45 இசைப்பயிற்சி 6 திருவழுந்தூர் ஏ கே கணேசபிள்ளை பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 நாதஸ்வரத்தியக்கச்சேரி 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 கும்பகோணம் சிவவடிவேலுப்பிள்ளை வயலின் 8-30 அமெரிக்க வாக்கு 8-45 திருவழுந்தூர் ஏ கே கணேசபிள்ளை பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.45 கோட்டுவாத்தியம் 10 இசைவேளை † 10-30 முடிவு.

### வியாழன் ஒக் 28

காலை 7-45 சீதாரம்பம் † 7-50 தமிழில்செய்திகள் 8 வீணை 8-15 ஆங்கிலத்தில்செய்திகள் 8-30 பொம்பலூர் என் அக்கப்பபிள்ளை நாகஸ்வரம் 9 முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 என் சுவாமிநாதஐயர் புல்லாங்குழல் 2 தமிழில் செய்திகள் 2-05 கல்விஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 என் சுவாமிநாதய்யர் புல்லாங்குழல் 5-45 இசைப்பயிற்சி 6 பீ எஸ் நடராஜன் பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 செய்தி விளக்கம் 7-30 அறிவிப்புகள் 7.35 தமிழில் செய்திகள் 7.45 திவுளிக்குத் திவுளி! 8-45 பீ எஸ் நடராஜன் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்துசெய்திகள் 9-45 சமாதான ஒத்திகை ஆங்கிலப்பேச்சு 10 ஐரோப்பிய சங்கீதம் 10-30 முடிவு.

### வெள்ளி ஒக் 29

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 திருச்சி வாத்திய கோஷ்டி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 எஸ் கமலாம்பாள்பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் †1.30 ஆங்கிலத்தில செய்திகள் 1-40 எஸ் கமலாம்பாள் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2.30 முடிவு.

மாலை 5 காஞ்சீபுரம் எம் என் வெங்கடவரதபிள்ளைபாட்டு 5-40 குரா-ஷரீப் 6 திருவாரூர் எஸ் வைத்தியநாதன், எஸ் ராஜரத்னம் நாகஸ்வரம் 6.30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 இலக்கிய வாசகம் 7-30 அறிவிப்புகள் 7-35தமிழில் செய்திகள் 7-45 ரேடியோ நாடக இசை 8 திருவாரூர் எஸ் வைத்தியநாதன், எஸ் ராஜரத்னம் நாகஸ்வரம் 8-45 காஞ்சீபுரம் எம் என் வெங்கடவரதபிள்ளை பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 உலக விவகாரங்கள் 10.00 திரைகானம் † 10-30 முடிவு.

### சனி ஒக் 30

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 இரு தாலிசை† 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 வி ராஜராமைய்யர் வயலின் 9 முடிவு.

1 எஸ் சுந்தரமய்யர் பாட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ராகங்கள்† 2 தமிழில்செய்திகள் 2-05 வி ராஜாராமய்யர் வயலின் 2.30 முடிவு.

மாலை 5 எஸ் சுந்தரமய்யர் பாட்டு 5-40 திருவாய்மொழிவிளக்கம் 6 டாக்கி இசை 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 குன்றுக்களஞ்சியம் பழ உணவு 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 மதராஸில் உள்ளபடி 9-15 லலிதா வெங்கடராம்† 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 தோடி† 10 பக்ஷாரகமாலிகை 10-30 முடிவு.

### ஞாயிறு ஒக் 31

காலை: 7-45 கீதாரம்பம்† 7-50 தமிழில் செய்திகள் 8 ராமலிங்க சுவாமிகள் 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 கடத்தூர் வெங்கடேசஐயர் வீணை 9 முடிவு.

12 திரைக்கதம்பம்† 12-30 ஒலிமலர் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 சுந்தர சாரதாம்பாள் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 இசைவகை 2-30 முடிவு

மாலை: 5 சுந்தர சாரதாம்பாள் பாட்டு 5-40 தேவாரதகை 6 கடத்தூர் வெங்கடேசய்யர் வீணை 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 காட்டுச் வசல்வம்—மரம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 எங்கள் தபால்ப் பெட்டி 8 மாயவரம் கோவிந்தராஜபிள்ளை வயலின் 9 சர்வகலாசாலைகளுக்கு 9-15 மோஹனம்† 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9 45 வல்லி பாரதம் 10 இசைவேளை† 10-30 முடிவு.

---


## யாழ்ப்பாணப் பட்டின சபைத் தேர்தல்

பெரியகடை வட்டாரம் (இல. 10)

நகை வியாபாரி K. A. கனகசபை ஆகிய நான் வரவிருக்கும் பட்டின சபைத் தேர்தலில், டீ வட்டாரத்துக்கு அவ்வட்டாரத்தைச் சேர்ந்த பெருந்தொகையான வாக்காளர்களின் வேண்டுதலின் பேரில், ஓர் அபேட்சகனாக முன்வரவிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

எல்லோரும் என்னை ஆதரிக்குமாறும் வேண்டிக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,
K. A. கனகசபை.

கன்னாதிட்டி,
வண்கிழக்கு,
யாழ்ப்பாணம்,
19—10—43

Mis—141 21&25—10—43

## பல் வைத்தியம்

### யாழ்ப்பாணம்

பல் வைத்தியம் செய்யவும் கண் பரிசோதனை செய்யவும் தத்துவம்பெற்றவரான திரு. எஸ். சாள்ஸ் பத்திருனு அவர்கள் வருஷத்தின் எல்லா மாசங்களிலும் 3-ந் திகதி தொடக்கம் 15-ந் திகதிவரையும் யாழ்ப்பாணம், பெரிய தெரு 43ம் இலக்கத்திலுள்ள வைத்திய சாலையில் கருமம் நடாத்துவார்.

### குருநாகல் கிளைஸ்தாபனம்

மாசத்தின் 20ந் திகதியிலிருந்து 30-ந் திகதி வரையும் குருநாகல் கோட்டுவீட்டுக்கு முன்னுள்ள பல்வைத்திய கிளைஸ்தாபனத்தில் கருமம் நடாத்துவார்.

யாழ்ப்பாணத்தில் அவரிடம் வைத்தியம் செய்விப்போர் முன் ஒழுங்குகள் செய்யவேண்டில் அவருடைய குருநாகல் விலாசத்துக்கு எழுதுதல் நல்லது.

(Mis. 98. 5.8—31.12.43)

## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ௵ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

134,36700

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

**பங்குப்பணங் கட்டுமுறை**

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்றுவரவு**

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்**

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம், 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்

**உண்டியல்கள்.**

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

**கடன்.**

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகோள்ளலாம்

S. கனகசபை
சிருப்பர்.

Y 164 21-11-41—20-11-43 (தி)

## பத்திரக் கிரயம்

1942-ம் ஆண்டு ஏப்பிறில் மாதத் தொடக்கமாக யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபையார்

**தாங்கள் நடாத்தும் இந்துசாதன ஆங்கில தமிழ்ப் பிரதிகட்குச்**

சமயோசிதமாகப் பின்வருமாறு பத்திரக்கிரயத்தைச் சிறிது உயர்த்தியுள்ளார்:-

| | | | |
|---|---|---|---|
| இந்துசாதனம் தமிழ்ப்பிரதி, வருடமொன்றிற்கு | | பட்டின எல்லையுள் | 6.50 |
| ,, ஆங்கிலப்பிரதி | ,, | " | 6.50 |
| இரு பிரதிகளுஞ் சேர்த்து | " | ,, | 10.50 |
| தமிழ்ப்பிரதி | ,' | பிறவூர்கட்கு | 9.50 |
| ஆங்கிலப்பிரதி | " | " | 9.50 |
| இரு பிரதிகளுஞ் சேர்த்து | ,, | ,, | 13.50 |

**தனிப்பிரதி 7 சதம்**

## அறிவித்தல்

குழந்தைகளுக்குக் காத்திராப்பிரகாரம் உண்டாகும் மாந்தம், இருமல், கிரந்தி காய்ச்சல் ஆகிய நோய்களைத் தணிக்கும் ஒப்புயர்வற்ற மருந்துகள் எம்மிடம் ஏராளமாயுண்டு.

குளிர்சுரம்(மலேரியா) இருமல், உஷ்ணச்சூடு, வாதம்,கிரந்தி, நரம்புப் பெலவீனம், மலடு ஆகிய நோய்களைத் தீர்க்கும் கீழ்க்கண்ட மருந்துகள் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

அயக்குழம்பு, சென்னகரம்பழநெய், காந்தபஸ்பம் வெள்ளைகுப்பஸ்பம், அமுதசர்க்கரை, கிரந்திக்குளிகை, பெருங்கிரந்தி எண்ணெய், கோட்டைச்சந்தனாதி எண்ணெய், மகாசஞ்சீவி மாத்திரை, கோரோசனை மாத்திரை, அயசெந்தூரம்.

சில்லாலைமுத்துவைத்தியசாலை, 160, மேல்வீடு, பெரியதெரு, யாழ்ப்பாணம்

வைத்தியர்: அ. செபஸ்தியாம்பிள்ளை.

(Q. 30. 11-5.43—10-11.43)

## குறைந்த விலையில் துணிகள்

ஷேட்துணிகள், துவாய்கள் பஞ்சாலும் பட்டாலும் ஆகிய சேலைகள் முதலியவை.

**R. S. M. டெக்ஸ்டைல் ஸ்ரோர்ஸ்**

மொத்தத்துக்கும் சில்லறைக்கும் விற்கும் வியாபாரிகள்

பெரியகடை—யாழ்ப்பாணம்.

K. A. இரத்தினசிங்கம்,
பங்காளர்.

Y 19. 4-3-42——3-3-44


---

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகோள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Monday 25, October, 1943.